முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 07.12.2023
O.S. 191/2021
பி.சா.1 கோமதி
வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு சொத்து 2.55 சென்ட் ஆகும். வழக்கு சொத்து 3 அடுக்கு கட்டிடம். அந்த கட்டிடம் நாங்கள் கட்டிய கட்டிடம் அல்ல. ஆக்கிரமிப்பாளர் கட்டிய கட்டிடம். வாதி கட்டிய கட்டிடம் என்றால் அது தெரியாது. அந்த கட்டிடத்தின் வாதி தான் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரிதான். அந்த கட்டிடத்திற்கு சொத்து வரி மதிப்பீடு வாதி பெயரில் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆக்கிரமிப்பாளர் பெயரில் செய்யப்பட்டுள்ளது.

ஆக்கிரமிப்பாளர் என நாங்கள் சொல்லுவது வாதி என்றால் முதலில் ஆர்த்தி ஐயப்பன் என்பவர்கள் ஆக்கிரமிப்பாளராக இருந்தார்கள். அவர்களிடம் இருந்து வாதி வாங்கியுள்ளார். 1989 ஆம் ஆண்டு ஆர்த்தி ஐயப்பன் ஆக்கிரமித்துள்ள விவரம் எங்களுக்கு தெரியவந்தது. அவர்கள் அப்போது முதல் வழக்கில் சொத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் ஆம் ஆக்கிரமைப்பு அகற்ற நாங்கள் நடவடிக்கை எடுத்து வந்தோம்.

வழக்கு கட்டிடத்தில் மின் இணைப்பு உள்ளதா என்றால் ஆம். எங்கள் அனுமதி இல்லாமல் வழங்கியுள்ளார்கள். அதற்கு நாங்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளோம். ஆர்த்திக்கு முன்பு பகவதியம்மாள் என்பவர் ஆக்கிரமிப்பாளராக இருந்தார். இந்து சமய அறநிலைத்துறை சட்டப்பிரிவு 78 ன் படி நடவடிக்கை எடுத்தோம். அந்த வழக்கு எண் எம்.பி 69/2016 வாதிக்கு எதிராக நடவடிக்கை எடுத்தோம்.

பகவதியம்மாளுக்கு அறிவிப்பு அனுப்பினோம். 1989 முதல்

2016 வரை ஒழிப்பிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அறிவிப்பு மட்டும் வழங்கினோம். அவர்கள் காலி செய்து தரவில்லை வாடகையும் செலுத்தவில்லை. திருநெல்வேலி இணை ஆணையர் இந்து சமய அறநிலைத்துறை உத்தரவு எதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆம். தேவைப்பட்டால் தாக்கல் செய்யலாம்.

வாதி மற்றும் முந்தைய ஆக்கிரமிப்பாளர்கள் தரை வாடகை எப்போதும் செலுத்தியதில்லை. கட்டிடம் கட்டக் கூடாது என்று நாங்கள் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறவில்லை. ஒழிப்பிக்க அறிவிப்பு அனுப்பியுள்ளோம். கட்டிடம் கட்டும் சமயம் வாதிக்கு கட்டுமானம் செய்யக்கூடாது என்று ஆட்சேபனை செய்து அறிவிப்பு கொடுத்துள்ளோமா என்றால் கோப்பை பார்த்து தான் சொல்ல முடியும். நாங்கள் வாதிக்கு கொடுத்தாக சொல்லும் அறிவிப்போ ஏனைய ஆவணங்களோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இணை ஆணையர் முன் தாக்கல் செய்துள்ளோம்.

இணை ஆணையர் உத்தரவு படி ஒழிப்பிக்க உத்தரவை கட்டிடத்தில்ஒட்டடினாம். இருமுறை உதவி ஆணையர் ஒழிப்பிக்க சென்ற போது வாதி தரப்பினர் தடஸ்தம் செய்தனர். 2021ஆம் ஆண்டு சென்றோம். வழக்கு சொத்திற்கான பத்திரம், பட்டா எங்கள் பெயரில் இல்லை என்றால் வருவாய் ஆவணங்கள் உள்ளது. வழக்கு சொத்தில் 50 ஆண்டுகளாக கட்டிடங்கள் உள்ளது என்றால் 10 ஆண்டுகளுகது முன் மொத்தம் 1 ஏக்கர் 51 சென்ட் நிலத்தில் சுமார் 70 கட்டிடங்கள் இருப்பது தெரியவந்தது.

1 ஏக்கர் 51 சென்ட்டில் 5 கட்டிடங்களை ஆக்கிரமிப்பு நீக்கி நாங்கள் கையகப்படுத்தினோம். 2021 ஆம் ஆண்டு 1 கட்டிடத்தை

கையகப்படுத்தினோம். மற்ற கட்டிடங்களை அதற்கு முன்பு கையகப்படுத்தினோம்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.